**“இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்” – யோவான் 1ம் அதிகாரம் 47ம் வசனம்**

**“Behold, an Israelite indeed, in whom is no guile” – John 1.47**

எனக்குப் பிரியமான நண்பன் **டேவிட் சதானந்தன் சொலமனைக்** குறித்து நான் குறிப்பிடக்கூடிய திருமறை வசனம் இதுவே.

நான் இப்போது கனடாவிலுள்ளேன். இந்த மாதம் 6ம் திகதி காலை ஆலய வழிபாட்டுக்காக ஆயத்தப்படுகையில் கனடா வாழ் நண்பன் **ஜேம்ஸ் தனபாலசிங்கம்** தொடர்பு கொண்டு எனக்குக் கூறிய அதிர்ச்சி செய்திதான் அருமை நண்பன் இநசொலமனின் மரணச் செய்தி. ஸ்தம்பித்துப் போனேன். ஆலயத்துக்கும் செல்ல என்னால் முடியவில்லை.

அன்புக்குரிய சொலமன் சுகவீனமாயிருக்கிறார் எனக் கேள்விப்பட்டு, மிகுந்த சிரமத்தின் மத்தியில் டினோ மூலம் தொடர்புகொண்டபோது, ‘‘**எங்கட Bishopஆ**’’ என்று கேட்டார். அப்போது, ‘‘ஆம்’’ எனச் சொல்லிவிட்டு அவரைத் தேற்றறிக்கொண்டு சொன்னேன், ‘‘**சொலமன், நீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். மருத்துவ செலவுக்காய் உதவி அனுப்பியுள்ளேன், இன்னமும் உதவி செய்வோம்.** என்னுடைய Gratuity எனக்குக் கிடைக்குமிடத்து, அதிகம் உதவுவேன் எனவும் வாக்களித்தேன். **மகன் டினோவின் இறையியல் படிப்புக்கான செலவை நான் ஏற்றுக் கொள்வேன்**’’ என்று கூறியபோது, மிகுந்த மகிழ்ச்சியடைந்து Thank you, Thank You, I know என்று கூறினார். அவருடைய மனைவி காமினி அடுத்த நாளில் என்னோடு தொடர்புகொண்டு ‘‘**ஐயா, நீங்கள் அவரோடு பேசிய பின்னர் மகிழ்ச்சியாயிருக்கிறார்**’’ என்றார். ‘‘செபிக்கிறேன்’’ என்று சொன்னேன்.

நான் அறிந்த சொலமன் யார்? நான் குறிப்பிட்ட திருமறை வசனத்திலுள்ளது போன்று இயேசு நாத்தேன்வேலைப் பார்த்துக் கூறியது போன்றதே அது. யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அதிபர் தேவைப்பட்டபோது அடியானின் கல்வியறிவு, குணாதிசயம் ஆகியவற்றை அறிந்தவர்களாய் கல்லூரி ஆளுநர் சபையினர் அருட்பணி கலாநிதி டீ.எஸ். சொலமனை ஏகமனதாக அவர்கள் தெரிவு செய்தனர். பின்னர், அவரை அதிபராக நியமனம் செய்யும் வழிபாட்டிலும் நான் அருளுரையாற்றினேன். ஆதீனத்தின் செயலர் பதவி வெற்றிடமானபோது, அவரையே ஆதீனம் ஏகமனமாக ஏற்றுக்கொண்டது. சி.எஸ்.ஐ. சினட் மகாசபையின் அங்கத்தவருமானார். நான் நான் பேராயராகச்சென்ற இறுதி கூட்டத்தில் சினட் செயற்குழு உறுப்பினராகவும் சொலமன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். சொலமன் NCC Executive Committee Member ஆகவும் பணியாற்றியுள்ளார். மட்டுமல்ல, கடந்த தடவை ஆசிய கிறிஸ்தவ மன்றத்தின் மகாநாட்டில் (General Assembly of the Christian Conference of Asia ) இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பிரதிநிதியாக இந்தோனீசியாவிலுள்ள ஜகார்த்தாவில் என்னோடுகூட கலந்துகொண்டார். அதன்போது, மத்தியகுழு உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டமையால் CCAஇன் உப தலைவருமானார். அப்போது கொழும்பு ஆங்கிலிக்கன் திருச்சபையின் பேராயருக்கு ஒரு இடம் கொடுக்கப்படலாம் என்ற கருத்து நிலவியபோது, எவ்வித தயக்கமுமின்றி தனது பதவியை அவருக்காக விட்டுக்கொடுத்த மிகச்சிறந்த குணமுடைய ஒருவராகப் பலராலும் மெச்சப்பட்டார். யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக அவரும், ஆளுநர் சபைத் தலைவராக நானும் அமெரிக்காவின் Bostonநகரில் யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா கூட்டத்தில் கலந்துகொண்டோம். அங்கு அவர் கல்லூரிக்காக ஆற்றிய பரிந்துரை அனைவராலும் மெச்சப்பட்டது.

பலரும் அடியானைக் குறித்துப் பேசியிருப்பர், அல்லது பேசக்கூடும். எனவே, காலந்தாழ்த்தாது நான் சுருக்கமாகக் கூ றுவது இதுதான்.

பேராயர் குலேந்திரன் அவர்கள் கலாநிதி அம்பலவாணர் ஐயாவை தனக்குப் பின்னதாக ஆதீனத்தை வழிநடாத்த சுட்டிக் காட்டினார். அம்பலவாணர் ஐயா கலாநிதி ஜெபநேசன் ஐயாவை முன்நிறுத்தினார். ஜெபநேசன் ஐயா அடியேனை சிபாரிசு செய்தார். அதுபோன்றே, இந்த டீ.எஸ். தியாகராஜா டீ.எஸ். சோலமனை முன்நிறுத்தினார் மக்களும் ஆதரித்தனர்.

சொலமனின் தாழ்மை, அவரது துணிவுடன்கூடிய பணிவு, அவரது இறைப்பற்று, மற்றும் அவரது பண்பு எனக்குப் பிடித்திருந்தது. ஆகையினால் அவரை நான் வெளிப்படையாகவே ஆதரித்தேன்.

அவரது அருமை மகன் டினோ தகப்பனாரின் மறைவு குறித்து எனக்கு எழுதும்போது, ‘‘கடவுள் அப்பாவில் அன்புகூர்ந்தார், எனவே, அப்பாவை எடுத்தும் கொண்டார்’’ என்ன சிறந்த கருத்து! ஆம், கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கே தோத்திரம். DINO ஒரு இறைப்பணியாளனாக, ஏன், இறைவனுக்குச் சித்தமானால், பேராயர் குலேந்திரன் வரிசையில், **பேராயர் டினோ சொலமனாக** வருவார் என நம்பி அவரை வழிநடத்துவோம்.

**இறுதியாக** காமினி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆதரவையும் செபங்களையும் கூறிக்கொண்டு, ‘‘**சொலமன், நீங்கள் கபடற்ற உத்தம இஸ்ரவேலன், கர்த்தர் உங்களில் பிரியமாயிருந்தார். நாம் ஒருநாள் அந்தக்கர்த்தருடைய சமுகத்தில் முகமுகமாகச் சந்திப்போம்** எனக் கூறி, அருமையான தம்பு போதகர் ஐயாவின் மற்றும் உறவினனும் நண்பனுமான போல் போதகரின் பிரியாவிடையிலே நான்கூறியதையே உங்களுக்கும் கூறி

எனது இரங்கலுரையை நிறைவு செய்கிறேன். ‘‘இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பேறுபெற்றவர்கள். அவர்கள் கடவுளை கடவுளை முகமுகமாய்க் காண்பார்கள்’’ BLESSED ARE THOSE WHO ARE PURE IN HEART; THEY SHALL SEE GOD”.

GOOD BYE MY DEAR FRIEND SOLOMON, WE WILL MEET IN THAT BEAUTIFUL SHORE ONE DAY!! AMEN, AMEN.